7 பாடம்

# சிங்கக்கெபியின் உள்ளும் வெளியும்

***தங்கள் விருப்பப்படி தேவனிடம் ஜெபிக்க முடியாதபடி உலகிலே பல இடங்களில் தடைகள் உள்ளன. நம் வேதாகமக் கதையிலே இன்றைக்கு அவ்விதமான தடையைப் பெற்ற ஒருவர் என்ன செய்தார் எனப் பார்ப்போம். அவருக்காக தேவன் செய்ததையும் பார்ப்போம்.***

தீயகுணமும் நேர்மையுமற்ற மற்ற அதிகாரிகளுக்கு தானியேலின் நேர்மை மிகவும் பிரச்சனையாக இருந்தது. தானியேல் இருக்கும் வரையிலும் தங்களால் எதையும் சுதந்தரமாகச் செய்யமுடியாதே; தங்களுடைய விருப்பம் போல ராஜாவையும் நாட்டு மக்களையும் ஏமாற்றமுடியாதே; குறுக்கு வழியில் பணம் நிறையச் சேர்க்க



முடியாதே என்றெல்லாம் எண்ணிக் கலங்கினார்கள். எனவேதான் பல நாட்களாகத் தீவிரமாக யோசித்து இப்படி ஒரு சட்டத்தை இயற்றினர். வெளிப்படையாக நோக்கினால், இச்சட்டம் தரியு ராஜாவைப் புகழவும், ராஜாவுக்கு மிகவும் மதிப்புக்கொடுக்கவும் மட்டுமே இயற்றப்பட்டதுபோல் தெரியும். ஆனால் தானியேலை தொலைக்கவே இச்சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அதன்படியே, தரியு ராஜாவைத் தவிர வேறு எரையும் 30 நாட்களுக்கு எவரும் வணங்கக்கூடாது என்று ராஜாவின்மூலம் ஒரு சட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர். ராஜாவும் அதிகாரிகளின் சூழ்ச்சியை அறியாமல் சட்டத்தில் கையெழுத்துப் போட்டாயிற்று.

எனவே, எப்படியேனும் தானியேலை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று முடிவு செய்தனர். ராஜாவின் சம்மதம் கிடைத்து விட்டதால் மிகவும் மகிழ்ந்தனர்.

இவை யாவும் அறிந்தும் தேவனுக்கே முதலிடம் கொடுக்கும்படியாக தானியேல் முடிவு செய்தார். எனவே, தன்

**மனன வசனம்**

**தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்.**

**தானியேல் 6:22.**

வழக்கத்தின்படியே தினமும் மூன்றுவேளையும் முழங்காற் படியிட்டு தேவனிடம் ஜெபித் தார். தேவனை ஸ்தோத்தரித் தார். மறைந்து நின்று தானியேல் ஜெபிப்பதைப் பார்த்த அதிகாரி கள் உடனே அவரை ராஜா விடம் அழைத்துச் சென்றனர்.

"தரியு ராஜாவே! நீர் என் றும் வாழ்க! நீர் கையெழுத்து வைத்துக் கொடுத்த கட்டளையை தானியேல் மதிக்கவில்லை. தன் வழக்கப்படியே மூன்று வேளை யும் தன் தேவனிடம் ஜெபிக் கிறான்.

போடப்பட்ட சட்டத்தை இனி, ராஜா நீர் கூட மாற்ற முடியாது அல்லவா? நீர் முன்பு சொல்லியபடியே உமது கட்டளையை மீறிய தானியே லைச் சிங்கக் கெபிக்குள் போடும் என்று ராஜாவை அவசரப்படுத்தினார்கள்.

தனக்குள்ளே தரியு ராஜா கலங்கித் தவித்தார். தானியேலை எப்படியேனும் தப்புவித்துவிட முயன்றார். வழியில்லை. அதி காரிகள் ராஜாவை நெருக்கினர். வேறு வழியின்றி தம் கட்டளைப் படியே செய்யுமாறு தானி யேலை ஒப்படைத்தார்.

மிகுந்த சந்தோஷத்தோடே தானியேலை அந்தத் தீயவர்கள் சிங்கங்களின் கெபியிலே போட் டார்கள். அப்போது ராஜா, "தானியேலே நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன் னைத் தப்புவிப்பார்" என்றார்.

சிங்கங்களின் மத்தியில் தானியேல் சுகமாகத் தூங் கினார். ராஜாவுக்கோ அன்று இரவில் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலையிலே நம்பிக்கை யோடும் தவிப்போடும் கெபி யின் அருகே விரைந்து வந்தார்.

"தானியேலே! ஜீவனுள்ள தேவனுடைய தாசனே! நீ இடை விடாமல் ஆராதிக்கிற உன்



# செய்தி

**ஜெபிக்கும்போதும் தேவனுக்குக் காத்திருக்கும்போதும் நான் தேவனுக்கு ஆராதனை செய்கிறேன்.**

தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?” என்று கேட்டார்.

தானியேல், “ராஜாவே நீர் என்றும் வாழ்க! சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடி, தேவன் தம் தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்” என்று சத்தமாயச் சொன்னார்.

உடனேயே, ராஜாவின் கட்டளைப்படியே கெபியிலிருந்து தானியேல் வெளியே தூக்கி விடப்பட்டார். ராஜா மிகவும் சந்தோஷம் அடைந்தார். ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதிகாரிகளோ கலங்கினர்.

என் பிரியமே! தானியேலைப் போன்று தேவனுக்கு உன் வாழ்வில் முதலிடம் கொடு. தேவன் உன்னைக் காப்பார்.

*செய்முறை:* **கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளுக்குப் பொருத்தமான எழுத்துகளை அவற்றின் மேலுள்ள கோடுகளில் எழுது. தானியேல் சிங்கக்கெபியில் போடப்பட்ட சம்பவத்தில் நமக்குள்ள முக்கியமான செய்தியை அறியலாம்.**





**பதில் 7**

த ம் ட ே ந மு பு லி வ னை

